தேனி மாவட்டம், மேகமலை–மணலார் பகுதியில் நேற்று (02.09.2025) மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தமிழ்நாட்டில் வளரிளம் பருவத்தில் அதிகமாக கர்ப்பங்கள் நிகழும் 24 வட்டாரங்களில் தெரு நாடகங்கள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் திட்டத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங், தேனி நாடாளுமன்ற உறுப்பினர் தங்க தமிழ்செல்வன், சட்டமன்ற உறுப்பினர்கள் என்.இராமகிருஷ்ணன் (கம்பம்), ஆ.மகாராஜன் (ஆண்டிபட்டி), கே.எஸ். சரவணக்குமார் (பெரியகுளம்) ஆகியோர் முன்னிலையில் தொடங்கி வைத்தார்.

தேனி மாவட்டத்தில் – வளரிளம் பருவ கர்ப்பத்தைத் தடுக்க

தெரு நாடகங்கள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் திட்டம்!

அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடங்கி வைத்தார்!

தேனி செப். 3 - தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம் மேகமலைமணலார் பகுதியில் நேற்று (02.09.2025) மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தமிழ்நாட்டில் வளரிளம் பருவத்தில் அதிகமாக கர்பங்கள் நிகழும் 24 வட்டாரங்களில் தெரு நாடகங்கள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் திட்டத்தினை மாவட்ட ஆட்சித் தலைவர் ரஞ்ஜீத் சிங், தங்க தமிழ் செல்வன் எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்கள் என். இராமகிருஷ்ணன், ஆ.மகாராஜன், கே.எஸ்.சரவணக்குமார் ஆகியோர் முன்னிலையில் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்ததாவது,

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் மூலம் தமிழ்நாட்டில் வளரிளம் பருவத்தில் கர்ப்பங்கள் நிகழும் 24 வட்டாரங்கள் அடையாளம் காணப்பட்டு, அந்த வட்டாரங்களில் உள்ள மக்களுக்கு தெரு நாடகங்கள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் திட்டம் செயல்படுத்தப்படும் என்று அறிவித்தார்கள்.

அதனடிப்படையில் இன்றைய தினம் இத்திட்டம் தமிழ்நாட்டில் தேனி உட்பட, 10 மாவட்டங்களில் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. தேனி மாவட்டத்தில் மொத்தம் உள்ள 8 வட்டங்களில் 6 வட்டங்களில் வளரிளம் பருவத்தில் கர்ப்பங்கள் அதிகமாக நிகழ்வதால் இத்திட்டம் மேகமலையில் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. 24 வட்டாரங்களில் ஒரு துணை சுகாதார மையத்திற்கு 5 கிராமங்கள் வீதம் 2320 கிராமங்களில் தெரு நாடகங்கள் நடைபெற உள்ளது.

பெண்கள் இளம்வயதில் திருமணம் செய்யும்போது, பெண்களின் கர்ப்பப்பை, கர்ப்பத்தை தாங்கும் அளவிற்கு வளர்ச்சி அடைந்திருக்காது. இதனால் குழந்தை மற்றும் தாய்க்கும் பாதிப்பு ஏற்படும். இதுதொடர்பாக, சமூகநலத்துறையின் சார்பில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இருந்தபோதிலும் மக்கள் நல்வாழ்வு துறையின் சார்பிலும் விழிப்புணர்வு பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, கலைக்குழுவினர் மூலம் தெருநாடகங்கள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

கலைக்குழுவினர் மூலம் வளரிளம் பருவத்தினர் மற்றும் சமூகத்தினரிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தவும், இளம்வயது கர்ப்பத்தினால் ஏற்படும் பாதிப்புகள் மற்றும் தடுக்கும் முறைகள் குறித்து தெரு நாடகங்கள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தி சமூக மாற்றுத்தை ஏற்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

தமிழ்நாட்டில் மகப்பேறு இறப்பு விகிதம் ஒரு இலட்சம் மகப்பேறு தாய்மார்களில் கடந்த 2021-2022 ஆம் ஆண்டில் 90 ஆகவும், 2022-2023 ஆம் ஆண்டில் 52 ஆகவும், 2023-2024 ஆம் ஆண்டில் 45.5 ஆகவும் 2024-2025 ஆம் ஆண்டில் 39.4 ஆகவும் குறைந்துள்ளது.

மகப்பேறு குழந்தை இறப்பு விகிதம் 1000 குழந்தைகளுக்கு 2021-2022 ஆம் ஆண்டில் 10.4 ஆகவும், 2022-2023 ஆம் ஆண்டில் 10.2 ஆகவும், 2023-2024 ஆம் ஆண்டில் 8.2 ஆகவும், 2024-2025 ஆம் ஆண்டில் 7.7 ஆகவும் குறைந்துள்ளது.

இதில் தேனி மாவட்டத்தில் மகப்பேறு இறப்பு விகிதமானது 43.3 ஆகவும், குழந்தை இறப்பு விகிதம் 9.4 ஆகவும் உள்ளது. மகப்பேறு இறப்பு விகிதம் மற்றும் குழந்தை இறப்பு விகிதத்தை பூஜ்ஜிய விகிதமாக குறைப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

தேனி மாவட்டத்தில் அதிக வளரிளம் கர்ப்பங்கள் நிகழும் 6 வட்டங்களில் உள்ள 105 துணை சுகாதார நிலையங்களில், ஒரு துணை சுகாதார நிலையத்திற்கு 5 வீதம் 525 தெரு நாடகங்கள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்த திட்டமிடப் பட்டுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மருத்துவ துறையில் மக்களை தேடி மருத்துவம், இன்னுயிர் காப்போம், நம்மை காக்கும் 48, இதயம் காப்போம், நடப்போம் நலம் பெறுவோம், மக்களை தேடி மருத்துவம் போன்ற பல்வேறு வகையான சிறப்பு மருத்துவ திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள்.

மேலும், குழந்தைகள் இடைநிற்றலை தவிர்க்க காலை உணவுத்திட்டம், இல்லம் தேடிக்கல்வி உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் தான் கல்வி மற்றும் மருத்துவத் துறையில் வளர்ச்சி அதிகமாக உள்ளது.

மருத்துவ நல்வாழ்வுத்துறையின் சுகாதார திட்டங்கள் சேவைகள் குறித்து தெரிந்து கொள்ள 104 என்ற எண்ணையும், குழந்தைகள் பாதுகாப்பு தொடர்பாக இலவச 1098 என்ற எண்ணையும், மனநலம் மற்றும் தற்கொலை தடுப்பு தொடர்பான ஆலோசனைகள் பெற 14416 என்ற எண்ணை தொடர்பு கொள்ளலாம்.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

இதில் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு உதவித்தொகை திட்டத்தின் கீழ் முதல் தவணையாக தலா ரூ.6000/ வீதம் 2 பயனாளிகளுக்கும், கர்ப்பிணி தாய்மார் களுக்கான மருத்துவ பெட்டகம் 4 பயனாளிகளுக்கும், மருந்து பெட்டகம் 2 பயனாளிகளுக்கு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் வழங்கினார்.

இந்நிகழ்வில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மரு.சினேஹாப்ரியா துணை இயக்குநர் விவேக் பரஸ்நாத் யாதவ், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி ஐ.மகாலட்சுமி, உத்தமபாளையம் வருவாய் கோட்டாட்சியர் செய்யது முகமது, இணை இயக்குநர்கள் செந்தில்குமார் (ஆரம்ப சுகாதார நிலையங்கள்), சுரேஷ்குமார் (பயிற்சி), மாவட்ட சுகாதார அலுவலர் ஜவஹர்லால், உதவி இயக்குநர் (பேரூராட்சி) கிறிஸ்டோபர் தாஸ், மாவட்ட சமூக நல அலுவலர் திருமதி சியாமளாதேவி, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் திருமதி ரேவதி, மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் மதியழகன், மாவட்ட நியமன அலுவலர் மரு.சசிதீபா, துணை காவல் கண் காணிப்பாளர் சுனில், வட்டார மருத்துவ அலுவலர் முருகன், செயல் அலுவலர் சீனிவாசன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

உச்சநீதிமன்றத் தீர்ப்பு: ஆசிரியர்களை அரசு கைவிடாது என்ற

அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிவிப்பு வரவேற்கத்தக்கது!

அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு தலைவர் சா.அருணன் அறிக்கை!

சென்னை, செப்.3- ஆசிரியர் நியமனம் மற்றும் பதவி உயர்விற்கு தகுதித் தேர்வு கட்டாயம் என உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்கிய நிலையில் ஆசிரியர்களை தமிழ்நாடு அரசு கை விடாது என அறிவித்த பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் அவர்களின் அறிவிப்பை தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு சார்பில் நிறுவனத் தலைவர் - சா.அருணன் - வரவேற்றுள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு :-

2011ஆம் ஆண்டு கட்டாய கல்வி உரிமை சட்டத்தை கொண்டு வந்து இடைநிலை ஆசிரியர் மற்றும் பட்டதாரி ஆசிரியர்களுக்கு தகுதித் தேர்வு கட்டாயம் என விதியை உருவாக்கி ஆசிரியர் தேர்வு ஆணையத்தின் மூலம் ஆசிரியர் தகுதி தேர்வு அடிப்படையிலேயே பணி நியமனம் நடைப்பெற்று வந்த நிலையில் பிறகு உச்சநீதிமன்ற உத்தரவு அடிப்படையில் தகுதி தேர்வில் மட்டும் தேர்ச்சியடைந்தால் போதாது போட்டித் தேர்விலும் தேர்ச்சி அடை வேண்டும் என்று அறிவித்து தகுதி தேர்வு மற்றும் போட்டித் தேர்வின் அடிப்படையில் ஆசிரியர்களை நியமித்து வருகின்றனர்.

கட்டாய கல்வி உரிமை சட்டத்தின் அடிப்படையில் பதவி உயர்விற்கும் தகுதி தேர்வு அவசியம் என தகுதி தேர்வில் தேர்ச்சி வெற்றி பெற்று பணி நியமனம் பெற்ற ஆசிரியர்கள் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர்.அதன் இறுதி தீர்ப்பு நேற்று வழங்கப்பட்டது 2011 ஆம் ஆண்டு ஒன்றிய அரசு கட்டாய கல்வி உரிமை சட்டத்தில் நடைமுறையில் உள்ளவாறு ஆசிரியர் பணிக்கும் பதவி உயர்விற்கும் தகுதி தேர்வு கட்டாயம் என்று தீர்ப்பு வழங்கி இருக்கிறது. இதனால் லட்சக்கணக்கான ஆசிரியர்கள் பாதிப்பிற்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்கள். தகுதி தேர்வு இல்லாமல் பணியாற்றும் ஆசிரியர்கள் ஓய்வு பெற ஐந்து வருடத்திற்குள் இருப்பவர்களுக்கு தகுதி தேர்வில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. மேலும் ஐந்து வருத்திற்கு மேல் இருந்தால் இரண்டு வருடத்திற்குள் தகுதி தேர்வில் தேர்ச்சி அடைந்தால் மட்டுமே பணி தொடர முடியும் என்றும் அறிவித்து தேர்வில் தேர்ச்சி அடையாத பட்சத்தில் கட்டாய விடுப்பு வழங்கி ஓய்வூதிய பலன்கள் அனைத்தும் வழங்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே 2004ஆம் ஆண்டு அதிமுக ஆட்சியில் எல்காட் மூலமாக சுமார் 1800 கணினி ஆசிரியர்களை மாதம் ரூ . 6000 தொகுப்பூதியத்தில் பணி நியமனம் செய்யப்பட்டு பணியாற்றினர். பின்பு 2006ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் கணினி ஆசிரியர்களை கைவிட கூடாது என எண்ணி கணினி ஆசிரியர்களை பணி நிரந்தரம் செய்ய முடிவெடுத்து அதாவது நேரடியாக நியமனம் செய்ய வழி வகையில்லை. ஆதலால் ஆசிரியர் தேர்வாணையம் மூலமாக தேர்வு நடத்தியே பணி நியமனம் செய்ய முடியும் என்ற நிலையை அறிந்த முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் அவர்களுக்குள்ளாக ஆசிரியர் தேர்வாணையத்தின் மூலமாக தேர்வை நடத்தி அனைவரையும் பணி நிரந்தரம் செய்து அவர்களின் வாழ்க்கையில் ஒளியேற்றி அழகு பார்த்தார் முத்தமிழ் அறிஞர் கலைஞர்.

மேலும் 2003ஆம் ஆண்டு புதிய பங்களிப்பு ஓய்வூதிய திட்டத்தை அப்போதைய அதிமுக அரசு கொண்டு வந்து ஒட்டு மொத்த அரசு ஊழியர்களை வஞ்சித்தது பழைய ஓய்வூதிய திட்டத்தை மீண்டும் கொண்டு வர அப்போது காலைவரையற்ற வேலை நிறுத்தத்தில் ஈடுப்பட்ட 1.5 லட்சம் அரசு ஊழியர்கள் ஆசிரியர்களை பணியிடை நீக்கம் செய்தனர். வேலைநிறுத்த போராட்டத்தை நசுக்க 15000 இளநிலை உதவியாளர்களை வேலைவாய்ப்பு அலுவலக மூலமாக பதிவு மூப்பு அடிப்படையில் மாதம் ரூ. 4000 தொகுப்பூதியத்தில் பணி நியமனம் செய்தனர் பின்பு பணி நிரந்தரம் செய்ய கோரியும் நிரந்தரம் செய்யவில்லை. பின் 2006 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் 15000 இளநிலை உதவியாளர்கள் அனைவரையும் பணி நிரந்தரம் செய்தார். அப்போது இளநிலை உதவியாளர் நியமனம் தமிழ்நாடு பணியாளர் தேர்வாணையத்தின் மூலமாக தான் நியமனம் செய்ய வேண்டும் என்று வழக்கு தொடரப்பட்டது. நீதிமன்றமும் தேர்வாணையத்தின் மூலமாக மட்டும் நியமனம் செய்ய முடியும் என தீர்ப்பளித்தது , இவர்கள் வாழ்வு கேள்விகுறியாகுமே என்ற உயரிய எண்ணம் வைத்த முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் இவர்கள் அதிமுக ஆட்சியில் பணி நியமனம் செய்யப்பட்டவர்கள் தானே என்ற எண்ணம் வைக்காமல் தேர்வாணையத்தின் மூலமாக தானே நியமிக்க வேண்டும் என்று கூறி 15000 இளநிலை உதவியாளர்களுக்கு உள்ளாக தமிழ்நாடு பணியாளர் தேர்வாணையத்தின் மூலமாக தேர்வு நடத்தி அனைவரையும் பணி நிரந்தரம் செய்து அரசு ஊழியர்கள் ஆசிரியர்களின் காவலர் என்பதை நிரூபித்து காட்டினார் முத்தமிழ் அறிஞர் கலைஞர்.

இதே நிலையில் இன்று உச்ச நீதிமன்றம் ஆசிரியர்கள் பணி நியமனம் மற்றும் பதவி உயர்விற்கு தகுதித் தேர்வில் தேர்ச்சி கட்டாயம் என தீர்ப்பு வழங்கி உள்ளது. இந்த உத்தரவு ஒட்டு மொத்த ஆசிரியர்களுக்கு அதிர்ச்சியை தந்து உள்ளனர்.

இந்நிலையில் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி நேற்று செய்தியாளர்கள் சந்திப்பில் தமிழ்நாடு முதலமைச்சர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் மறுவுருவம் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆசிரியர்களை கை விட மாட்டார் என்று தெரிவித்து இருப்பதை தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு வரவேற்கிறது. இந்த அறிவிப்பு ஏற்கனவே இளநிலை உதவியாளர் பணி நிரந்தரம் கணினி ஆசிரியர்கள் பணி நிறந்தரம் உறித்த முடிவை முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் எவ்வாறு கையாண்டாரோ அந்த நிலையில் தமிழ்நாடு முதலமைச்சர் கையாளுவார் என்ற நம்பிக்கையோடு ஆசிரியர் சமுதாயம் உள்ளது.

இவ்வாறு சா.அருணன் தெரிவித்துள்ளார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாளையொட்டி

“அன்னம் தரும் அமுதகரம்” 195 வது நாள்!

அம்பத்தூர் கிழக்குப் பகுதியில் உணவு வழங்கப்பட்டது!

சென்னை, செப்.3- தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு “அன்னம் தரும் அமுதக்கரங்கள்” மாபெரும் திட்டத்தின் 195 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (02.09.2025), அம்பத்தூர் கிழக்கு பகுதி: 1) வட்டம் 82 அ கள்ளிகுப்பம் ஆர்ச் அருகில் கள்ளிகுப்பம். 2) வட்டம் 82 20 B பஸ் நிலையம் அருகில், மேனாம்பேடு, சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு வழிகாட்டுதல் படி, தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தர மாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!” என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ, பி.கே.மூர்த்தி.எம்.சி, எம்.டி.ஆர். நாகராஜ், டி.எஸ். பி.ராஜகோபால் எம்.சி, டாக்டர்.ஜி சாந்தகுமாரி எம்.சி, எல்.பி.எஃப். மோகன், டாக்டர் பூர்ணிமா எம்.சி, ரமேஷ் என்ற நீலகண்டன் எம்.சி து.ஆயிரம், ஜி.வி.நாகவள்ளி எம்.சி, கு.கிருஷ்ணமூர்த்தி அம்பத்தூர்/கிழக்கு வடக்கு/ தெற்கு/ வட்ட கழக செயலாளர்கள்: மு.சண்முகம், ஆ.சுந்தரராஜ், லோகநாதன், சு.மோகன்குமார், மு. விஜயகுமார், த.வ.லால் பி.செந்தில்.வி.ரவிந்திரன், பு.வீரா(எ) வீரராகவன், வெ.ராதாகிருஷ்ணன், த.கண்ணபிரான், எம்.கமல் எம்.சி, டி.பிரகாஷ் தயாளன், சி.சீனிவாசன், எம்.ஈ. சேகர் எம்.சி, நா.நெப்போலியன், ஆர்.டீக்கா, ஒருங்கிணைப்பாளர்கள்: சொ. வேலு, எஸ்.முரளி, பெரம்பூர் ஆர்.ராஜன், கே.ஆர். அபரஞ்சி, அசோக் ஜெயின், பு.விஜயகுமார், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

திருவள்ளூர் நகரம் வார்டு 10 மற்றும் 11 பகுதிகளுக்குகான உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி. இராஜேந்திரன் பொதுமக்களிடத்திலிருந்து பெறப்பட்ட கோரிக்கை மனுக்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என துறை சார்ந்த அலுவலர்களிடத்தில் எடுத்துரைத்தார். மேலும் முகாமில் பங்கேற்ற பொதுமக்களுக்கு மதிய உணவு வழங்கினார். நிகழ்ச்சியில் நகர செயலாளர் சி.சு.ரவிச்சந்திரன், ஒன்றிய கழகச் செயலாளர் ஆர். ஜெயசீலன், திருவள்ளூர் நகராட்சி தலைவர் உதயமலர் பாண்டியன் , வட்டாட்சியர் (பொ) விஜயகுமாரி, மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் வி. எஸ். நேதாஜி, பொன். பாண்டியன், டி.எம்.இரவி, நகர்மன்ற உறுப்பினர்கள் வி.இ.ஜான், டி.கே.பாபு, த.அயூப்அலி, இரா. விஜயகுமார், தாமஸ் என்கிற ராஜ்குமார், கு. பிரபாகரன், டி.ஜெய்கிருஷ்ணா, காந்திமதி, கிருஷ்ணா, ஜெ.சேகர், பி. ஞானசேகர், உமாசங்கர், பிரகாஷ், ரவி சேகர், விவேக், ஆகாஷ் ராஜ் உள்ளிட்ட வார்டு கழக செயலாளர்கள், பிரதிநிதிகள், நிர்வாகிகள் மற்றும் ஏராளமான பொதுமக்கள் பங்கேற்றனர்.

திருவள்ளூர் மேற்கு மாவட்டம் திருத்தணி நகரத்தில் உள்ள 8.9 வார்டுகளில் கிளைக் கழக கூட்டம் நடைபெற்றது இதில் திருவள்ளூர் மேற்கு மாவட்ட செயலாளர் திருத்தணி திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ கலந்து கொண்டு கழக வளர்ச்சிப் பணிகள் குறித்து ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்த்தமைக்கு நன்றி தெரிவித்தும் வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் கழகத் தலைவரை மீண்டும் ஆட்சியில் அமர்ந்திட இரவும் பகலும் பாராமல் அயராத உழைப்போம் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதில் தொகுதி பார்வையாளர் சண்முகநாதன், நகர கழகச் செயலாளர் திருத்தணி வி.வினோத்குமார், மற்றும் நகர கழக நிர்வாகிகள் கிளை கழகச் செயலாளர்கள் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.